# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

11.10.2020 சனிக்கிழமை




## நோயாளரை பார்வையிட செல்வதைத் தவிருங்கள்!

கொழும்பு, ஒக்.11
நோயாளிகளைப் பார்வையிடுவதற்கு மருத்துவமனைக்குச் செல்வதைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று சுகாதார அமைச்சு பொதுமக்களிடம் கோரியுள்ளது. மருத்துவமனைக்குச் செல்லும்போது ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணு

2

## புதினம் தெரியுமோ?

உங்களுக்கு இராமர் இலங்கைக்கு வர பாலம் கட்டேக்க, அணிலும் புலுனியும் வேலை செய்த கதை தெரியும் தானே? உண்மையா வேலை செய்த அணிலை விட , அங்க படுத்திருந்திட்டு தான் மட்டுமே பாலம் கட்ட குத்தி முறிஞ்சதா கதைவிட்டு, புலுனி வாங்கிக் கட்டிச்சாம். அதை மாதிரி ஆறாரோ குத்தின அரிசிக்கெல்லாம் தான் மட்டுமே குத்தி அரிசியான தெண்டு ஒருத்தர் , மீடியாக்களை கூப்பிட்டு இண்டைக்கு மீட்டிங்

2

## கொரோனாவுக்கு நடுவே புலமைப் பரிசில் பரீட்சை!

யாழ்ப்பாணம், ஒக்.11
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இன்று சுகாதார நடைமுறைகளுடன் நடைபெற்றது. மாணவர்கள் முகக்கவசம் அணிந்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிப் பரீட்சையில் தோற்றினார்கள். வடக்கு மாகாணத்தில் 212 பரீட்சை நிலையங்களில் பரீட்சைகள் நடைபெற்றன. கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக மாணவர்களின் உடல்

2

# அடங்க மறுத்தால் மீள 'லொக் டவுன்'

## இராணுவ தளபதி எச்சரிக்கை



**கொழும்பு, ஒக்ரோபர் 11**
**கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்காத பட்சத்தில் நாட்டை மீண்டும் முடக்கவேண்டிய நிலை (லொக் டவுன்) ஏற்படக்கூடும்.**

2

## சீனா செல்கிறார் கோத்தா

கொழும்பு, ஒக்.11
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சீனப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. சீன உயர்மட்டக் குழு இலங்கைக்கு வந்து சென்றுள்ள நிலையில் ஜனாதி

2



## வடக்கில் தனிமைப்படுத்தல் மையமாகும் கல்வியியல் கல்லூரிகள்

*கோப்பாய் ஆசிரியர் கலாசாலையும் உள்ளடக்கம்*

யாழ்ப்பாணம், ஒக்.11
யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரி, வவுனியா பூந்தோட்டத் தில் அமைந்துள்ள தேசிய கல்வியல் கல்லூரி ஆகியவற்றை தனிமைப்படுத்தல் மையமாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் இராணுவத்தின

2

## ஜாலிய சேனாரத்ன வடக்குக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.11
முன்னாள் பொலிஸ் பேச்சாளர், மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன காங்கேசன்துறையில் அமைந்துள்ள வடக்கு மாகாண

2

## ஹெரோய்னை மூக்கில் மறைத்த கில்லாடி கைது

யாழ்ப்பாணம், ஒக்.11
ஹெரோய்னை மூக்கில் மறைத்து வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணம்

2

## பெரியகடை, பட்டிதோட்டம் முடக்கப்படும் அபாயநிலை

2

## இயல்புக்கு திரும்பின அனலைதீவு, காரைநகர்

கொழும்பு, ஒக்.11
அனலைதீவு மற்றும் காரைநகரின் சில பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டிருந்த தற்காலிக முடக்கம் இன்று நீக்கப் பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம்

2

## இன்னும் நீடிக்கின்றது 3ஆவது அலை மர்மம்!

ஆரம்பப் புள்ளியைக் கண்டுபிடிக்க முடியாது திணறுகின்றது அரசு

கொழும்பு, ஒக்.11
இலங்கையில் கொரோனா வைரஸ் மூன்றாவது அலை தாக்கத்தின் ஆரம்பம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. புலனாய்வுப் பிரிவினரும், சுகாதார அதிகாரிகளும் இணைந்து வைரஸ் எவ்வாறு பரவியது என்பதை கண்டறியும் கூட்டு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்

2



## ஜெயபுரத்தில் 100 ஏக்கர் மக்களிடம் கையளிப்பு!

கிளிநொச்சி, ஒக்.11
கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஜெயபுரத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான 100 ஏக்கர் காணிகள் இன்று

2 A

# அடங்க மறுத்தால்...

இவ்வாறு கொரோனா ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா இன்று தெரிவித்தார்.
இலங்கையில் கொரோனா வைரஸ் மீண்டும் தலைதூக்கியுள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முடக்கும் திட்டமேதும் உள்ளதா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
கம்பஹா மாவட்டத்தில் பல பொலிஸ் பிரிவுகளுக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. எனினும், அத்தியாவசிய பொருள்களை வாங்குவதற்கு அம்மக்களுக்கு ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்பட்டன. இந்நிலையில் வழங்கப்பட்டுள்ள வாய்ப்பை சிலர் தவறாகப் பயன்படுத்துவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.
ஒரு நபரால் சுமார் 520 பேருக்கு வைரஸை பரப்ப முடியும் என வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நாட்டு மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி கொரோனா ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காதபட்சத்தில் கொரோனா கொத்தணிப் பரவல், சமுகத்தொற்றா கமாறும் அபாயம் உள்ளது.
முடிந்தளவு வீட்டில் இருங்கள். அநாவசியமாக பொதுவெளியில் நடமாடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.
அத்துடன், சுகாதார நடைமுறைகளையும் முழுமையாக பின்பற்றுங்கள். மக்கள் வழங்கும் ஒத்துழைப்பிலேயே நாடு முடக்கப்படுமா, இல்லையா என்ற தீர்மானம் தங்கியுள்ளது. தற்போதைய சூழ்நிலையில் நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தும் எதிர்ப்பார்ப்பு இல்லை. மக்களிடம் இருந்து ஒத்துழைப்பை எதிர்ப்பார்க்கின்றோம். தமக்கு வைரஸ் தொற்றாமல் இருக்கும்வகையில் மக்கள் சுகாதார பாதுகாப்புடன் செயற்படவேண்டும். சிலவேளை ஒரு சில பகுதிகளில் ஒரே தடவையில் அதிகளவு தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும்பட்சத்தில் நடவடிக்கைக்கு (தனிமைப்படுத்தல் ஊடரங்கு) செல்லவேண்டிய நிலை அரசுக்கு ஏற்படும். என்றார். (எ-44)

## புதினம் தெரியுமோ?

**வைச்சிருக்கிறார். அவர் ஆரெண்டு உங்களுக்கும் தெரியும் தானே. வேற ஆர், எங்கட கூட்டமைப்பு சட்டாம்பி தான். 20 ஆவது திருத்தத்தில் உள்ள சில விசயங்களை கொண்டுவர வேணுமெண்டால் கட்டாயம் சர்வஜன வாக்கெடுப்பு செய்யவேணும் எண்டு உயர் நீதிமன்றம் இறுக்கமாச் சொல்லிப் போட்டுது. அந்த வழக்கில கிட்டத்தட்ட 22 சட்டத்தரணிகள் ஆஜரானவை. அதில பாயிஸ் முஸ்தபா, கனக ஈஸ்வரன் , ஹக்கீம் எண்டு முக்கிய மான சட்டத்தரணிகளோட, கூட்டமைப்பு சட்டாம்பியும் ஒருத்தர். உயர்நீதிமன்றம் இப்பிடி ஒரு அடியை அரசாங்கத்துக்கு குடுக்கிறதுக்கு அந்த 22 சட்டத்தரணிகளும் தான் காரணம். ஆனால் இண்டைக்கு விடிய வெள்ளனவே ஆள் மீடியாக்கார ஆக்களை கூப்பிட்டு , நான் தான் எல்லாம் வெட்டிப் பிடுங்கினனான். மற்றவை எல்லாம் சும்மா ஒப்புக்குச்சப்பாணிகள் தான் எண்ட கணக்கில அடிச்சு விட்டிருக்கிறார். ஒரு ஏணியின்ர உச்சிக்கு ஒராள் ஏறிச்சு எண்டால் அதுக்குக் காரணம் ஏணியில இருக்கிற எல்லாப் படிகளும் தான். அதை விட்டிட்டு கடைசிப்படி தான் ஏற வைச்சது எண்டுற மாதிரித்தான் கூடிச் செய்த காரியத்துக்கு சொந்தம் கொண்டாடுற வேலையும் இருக்கு. என்ன செய்ய, இப்பிடி ஏதும் உருட்டிபிரட்டு, சுத்துமாத்து செய்தாத்தானே அதைவைச்சு அடுத்த தேர்தலிலையும் பிழைக்க முடியும். -பட்சி**

## ஹெரோய்னை மூக்கில்...

நகரை அண்டிய முலவைச் சந்தியில் வைத்தே சந்தேநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
அந்தப் பகுதியில் போதைப்பொருள் விற்பனை நடைபெறுகின்றது என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் அங்கு சென்று விசாரணை மேற்கொண்டுள்ளனர்.
சந்தேகநபர்தனது மூக்குத்துவாரத்துக்கள் ஹெரோயினை மறைத்து வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டார். சந்தேகநபரிடம் இருந்து 550 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப் பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

## நோயாளரை...

வது அவசியம். மருத்துவமனைக்கு நோயாளர்களைப் பார்க்கச் செல்வோர் பொருள்கள், மருந்துகளை நோயாளிகளிடம் நேரடியாக வழங்க வேண்டாம். அத்தியாவசிய தேவைகள் தவிர்த்து மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

## சீனா...

பதியின் பயணம் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன. எதிர்வரும் டிசெம்பர் மாதம் அவர் சீனா செல்வார் என்றும், அதன்போது முக்கிய உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## பெரியகடை,...

மன்னார், ஒப்.11
மன்னாரில் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்ட நபர் பெரியகடை மற்றும் பட்டிதோட்டம் ஆகிய இடங்களில் அதிக தொடர்புகளை மேற்கொண்டுள்ளதால், அங்குள்ளவர்களைத் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
மன்னார் ஆயர் இல்லத்தில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் பலருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகள் வெளியாகவில்லை.
அதனால் மக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும் என்றும், தேவையற்ற நடமாட்டங்களைத் தவிர்க்க வேண்டும் என்றும் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (எ-56)

## ஜாலிய சேனாரத்ன...

மூத்த பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.
வடமாகாண மூத்த பொலிஸ் மா அதிபரின் பிரத்தியேக உதவியாளராக அவர் கடமையாற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதேவேளை, பொலிஸ் பேச்சாளராக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண நியமிக்கப்பட்டுள்ளார். மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன, பொலிஸ் பேச்சாளராக இருந்தபோது, ரிஷாத் பதியூதின் சகோதரரின் விடுதலை தொடர்பில் அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டார் என்று கூறப்படுகின்றது. (எ-இ)

## தனிமைப்படுத்தல்...

ரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இந்தக் கல்லூரிகளின் கல்விச் செயற்பாடுகள் இன்றிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், அங்கு கற்கும் ஆசிரிய மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டு அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
ஆசிரிய மாணவர்கள் இராணுவத்தின் ஏற்பாட்டில் பேருந்துகள் மூலம் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.
இதேவேளை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையும் தனிமைப்படுத்தல் மையமாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. (எ-110)



## இன்னும்...

றனர்.
மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்த திவுலப்பிட்டிய பகுதி பெண்ணொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானதையடுத்து அந்தத் தொழிற்சாலை ஊழியர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் பலருக்கு வைரஸ் தொற்றியுள்ளமை கண்டறியப்பட்டது.
அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்களுக்கும் வைரஸ் பரவியுள்ளது.
மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலை கொரோனா கொத்தணி பரவல் மூலம் நாட்டில் இன்று காலைவரை ஆயிரத்து நூறுக்கும் மேற்பட்டவர்களுக்கு வைரஸ் தொற்றியுள்ளமை பி.சி.ஆர். பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டுள்ளது. நேற்று மட்டும் 4 ஆயிரத்து 754 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
திவுலப்பிட்டிய பெண்ணுக்கு எவ்வாறு வைரஸ் தொற்றியது என்பது தொடர்பில் பலகோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.
இது தொடர்பில் இராணுவத் தளபதி தெரிவித்ததாவது
திவுலப்பிட்டிய பெண் காய்ச்சல் காரணமாக 30 ஆம் திகதியே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஆனால் அந்தத் தொழிற்சாலையில் பணிபுரிந்த ஊழியர்கள் சிலருக்கு 21 ஆம் திகதி முதலே இருமல், தடிமல் போன்ற நோய் அறிகுறிகள் இருந்துள்ளன என்று தொழிற்சாலையின் வைத்திய பிரிவு தெரிவித்துள்ளது. தற்போதைய சூழ்நிலையில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கும், மற்றையவர்களுக்குத் தொற்றாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதுமே எமது பிரதான பணியாக இருக்கின்றது. வைரஸ் தொற்றின்மூலம் இன்னும் உரியவகையில் கண்டறியப்படவில்லை.என்றார். (எ-44)

## இயல்புக்கு திரும்பியது...

மாவட்டச் செயலாளர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.
இந்தியாவில் இருந்து மஞ்சள் கடத்தி வந்தவர்கள் நடமாடியதை அடுத்து அனலைதீவு மற்றும் காரைநகரின் சில பகுதிகள் முடக்கப்பட்டிருந்தன.
மஞ்சள் கடத்தியவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில் அவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்தப் பரிசோதனைகளில் அவர்களுக்கு கொரோனா தொற்று இல்லை உறுதி செய்யப்பட்டதை அடுத்து தற்காலிக முடக்கம் நீக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார். (எ-111)

# கொரோனாவுக்கு நடுவே......

வெப்பநிலை அளக்கப்பட்டு, தனி நபர் இடைவெளி பேணப்பட்டு பரீட்சை நடத்தப்பட்டது.

**யாழ்ப்பாணம்**



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ்ப்பாணம், தென்மராட்சி, தீவகம் வலயத்தில் 3 ஆயிரத்து 540 மாணவர்களும், வடமராட்சி, வலிகாமம் வலயத்தில் 4 ஆயிரத்து 870 மாணவர்களும் பரீட்சையில் தோற்றினர். 94 பரீட்சை நிலையங்களில், 22 இணைப்பு நிலையங்களின் கீழ் பரீட்சைகள் நடைபெற்றன.
சுகாதார நடைமுறைக்கு அமைய பரீட்சை மண்டபங்கள் தயார்ப்படுத்தப்பட்டிருந்தன. மாணவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பரீட்சை எழுதினர்.

**கிளிநொச்சி**



கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 555 மாணவர்கள் பரீட்சையில் தோற்றினர். அவர்களுக்காக 39 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.
கிளிநொச்சி இயக்கச்சிப் பகுதியில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் முகாம்களில் இருந்து 7 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றினர். அவர்களுக்கான சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**வவுனியா**



வவுனியா மாவட்டத்தில் 3 ஆயிரத்து 578 மாணவர்கள் பரீட்சையில் தோற்றினர். அவர்களுக்காக 48 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.
வவுனியா தெற்கு வலயத்தில் 3 ஆயிரத்து 2 மாணவர்கள் தோற்றினர், வடக்கு வலயத்தில் 576 மாணவர்கள் தோற்றினர்.

**மன்னார்**



மன்னாரில் சுகாதார நடைமுறைகளுடன் பரீட்சை நடைபெற்றது. மாணவர்களின் உடல் வெப்ப நிலை அளவீடு செய்யப்பட்டு கைகள் சுத்தம் செய்யப்பட்டு பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். ஒரு சில பாடசாலைகளுக்கு மாணவர்களை அழைத்து வந்த பெற்றோர் தனிநபர் இடைவெளி பேணாது செயற்பட்டமையை அவதானிக்க முடிந்துள்ளது.

**முல்லைத்தீவு**



முல்லைத்தீவு மாவட்டதில் 2 ஆயிரத்து 392 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். அவர்களுக்காக 27 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

**மலையகம்**

மலையகத்தில் இன்று மழையுடன் கூடிய காலநிலை நிலவியது. எனினும் மாணவர்கள் உற்சாகமாகப் பரீட்சையில் எழுதியுள்ளனர். மாணவர்கள் பாதுகாப்பான முறையில் பரீட்சையில் தோற்றுவதற்கான சுகாதார ஏற்பாடுகளை சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைவாக கல்வி அமைச்சு ஒழுங்கு செய்திருந்தது.(எ-6,110,56,19,40)

# ஜெயபுரத்தில்....

விடுவிக்கப்பட்டுள்ளன.
மாவட்ட வனவளத் திணைக்கள அதிகாரிகள் இந்தக் காணிகளை மக்களிடம் கையளித்தனர். 1980 ஆம் ஆண்டு மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளை போர் காரணமாக மக்கள் பராமரிக்க முடியவில்லை. அதனால் அந்தக் காணிகள் பற்றைக் காடுகளாக மாறியிருந்தன. போரின் பின்னர் மக்கள் மீள்குடியமர்ந்துள்ள நிலையில், அந்தக் காணிகளில் விவசாயம் செய்ய வனவளத் திணைக்களம் அனுமதி மறுத்திருந்தது. தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று ஜெயபுரம் மக்கள் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் முன்னெடுத்து வந்தனர். இந்த நிலையில் இந்தக் காணிகள் தற்போது மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.(எ-214)

# தம்புள்ள சந்தைக்கு சென்றோருக்கு தொற்று!!

கொழும்பு, ஒக்.11
தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்குச் சென்ற இருவர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இவர்கள் இருவரும் துககஹா- இந்துராகார மற்றும் திவுலப்பிட்டிய, பட்டபொல ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது. இவர்கள் ரம்புக்கன வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும், ப்ரண்டிக்ஸ் தொழிற்சாலையில் பணியாற்றியவர்களுடன் கதிர்காமம் சென்றிருந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. தம்புள்ளை மத்திய பொருளாதார நிலையத்தில் 100 பேருக்கு பி.சீ.ஆர்.பரி சோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

# சுகாதார ஒழுங்கு விதிகளின் சட்டவரைவு வர்த்தமானியில்

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு,ஒக்.12
சுகாதார ஒழுங்குவிதிகள் அடங்கிய சட்ட வரைவை, வர்த்தமானியில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
சட்ட வரைவை தயார் செய்வதற்கான ஒழுங்கு விதிகள், சட்ட வரைவு திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. நாட்டில் கொரோனா தொற்றாளர்கள் அதிகளவில் பதிவாகாதிருப்பதற்கு, பொதுமக்களின் ஒத்துழைப்பு சிறப்பாக உள்ளது. எனினும், அரசால் விதிக்கப்பட்டுள்ள சுகாதார ஒழுங்கு விதிகளை, சட்டமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சட்ட வரைவு திணைக்களத்திலிருந்து, சட்ட வரைவு கிடைத்தவுடன், அதனை வர்த்தமானியில் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
வர்த்தமானியில் வெளியிடப்படும் ஒழுங்கு விதிகளை பின்பற்றாதவர்கள், பிடியாணை இன்றி கைது செய்யப்படுவர். அவ்வாறு கைது செய்யப்படுவோருக்கு, 6 மாதங்கள் சிறைத்தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கான, சட்டத் திருத்தங்களும் வர்த்தமானியில் உள்ளடக்கப்படும். முகக்கவசம் அணிதல், தனிநபர் இடைவெளியைப் பேணுதல் உள்ளிட்ட விடயங்களை வர்த்தமானியூடாக சட்டமாக்கவுள்ளோம். என்றார். (க-இ)

# 14வயது சிறுமி துஷ்பிரயோகம்

## கோடீஸ்வர முதியவர் கைது

கொழும்பு, ஒக்.12
லொத்தர் சீட்டிழுப்பு ஒன்றின் மூலம் கோடீஸ்வரரான முதியவரால், அவருடைய பேத்தியான சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து அந்த முதியவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.
பாதிக்கப்பட்ட சிறுமி வழங்கிய வாக்குமூலத்துக்கு அமையவே முதியவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சிறுமி 14 வயது நிரம்பியவர் என்பதோடு, குறித்த முதியவரால் கடந்த ஐந்து வருடங்களாக துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ப-இ)

# மகாவலி வலயங்களில் சோளப் பயிர்ச்செய்கை

## இராஜாங்க அமைச்சர் ஆரம்பித்துவைத்தார்

கொழும்பு, ஒக்.11

நாட்டுக்குத் தேவையான சோளத்தை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ் மகாவலி வலயங்களில் 25 ஆயிரம் ஏக்கரில் சோளச் செய்கையை மேற்கொள்ளும் தேசிய வேலைத்திட்டம் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் தலைமையில் மகாவலி எல் வலயத்திற்குட்பட்ட வெலிஓயா, நிக்கவெவ பிரதேசங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.



இத் திட்டத்தின் கீழ் இம்மாத முடிவுக்குள் 15 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சோளச் செய்கை ஆரம்பிக்கப்படவுள்ள போதிலும் அவற்றில் 3 ஆயிரம் ஏக்கரில் சோளச் செய்கை தற்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான காணிகளை விவசாயிகளுக்கு சலுகை வரி அடிப்படையில் பகிரிந்தளித்து இந் நாட்டு சோளத் தேவையை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சோளம்வித்துகளுக்கு செலவாகும் நிதியில் அரைப்பகுதியை மகாவலி அதிகார சபை பொறுப்பேற்க உள்ளது. அத்தோடு சோள அறுவடையைக் கொள்வனவு செய்வதற்கு அரச மற்றும் தனியார் துறையினரின் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்பட உள்ளது என்றும் இராஜாங்க அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது உள்நாட்டுக்கு அவசியப்படும் சோளத் தேவையை உள்நாட்டில் உற்பத்திசெய்வதன் மூலம் சோள இறக்குமதிக்கு செலவிடப்படும் அந்நிய செலவாணியை நாட்டினுள் மீதப்படுத்திக்கொள்ள முடியும் என்று இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் இத் திட்டத்தைத் தொடக்கி வைத்து உரையாற்றும போது குறிப்பிட்டார்.

வருடமொன்றுக்கு நாட்டின் சோளத் தேவை ஐந்து இலட்சம் மெற்றிக் தொன்களாகும். அவற்றில் அரைப்பகுதியே தற்போது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றது. மிகுதி அரைப்பகுதி வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந)

# மலசலகூட குழிக்குள் கேரளக் கஞ்சா மீட்பு

திருகோணமலை, ஒக்.11

திருகோணமலை விசேட பொலிஸ் அதிரடிப்படையினரும், மொரவெவ பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கேரளக் கஞ்சாவை மலசலகூடத்தின் குழிக்குள் மறைத்து வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்..

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கைதுசெய்யப்பட்டவர் திருகோணமலை ரொட்டவெவ பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவராவார்.

ஹெரோய்ன் மற்றும் கேரளக் கஞ்சா விற்பனையில் முகவராக செயற்பட்டுவரும் பிரதான சந்தேகநபரான இவரின் வீட்டைச் சுற்றிவளைத்தபோது, இவரிடம் இருந்து கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. விசேட பொலிஸ் அதிரடிப்படையினரைக் கண்டு விற்கப்படாதிருந்த கேரளக் கஞ்சாவை மலசலகூட குழிக்குள் போட்ட நிலையில் அதனை பொலிஸாரும் விசேட பொலிஸ் அதிரடிப்படையினரும் இணைந்து மீட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தொடர்பில் திருகோணமலை நீதிமன்றில் கஞ்சா மற்றும் ஹெரோய்ன் தொடர்பில் வழக்குகள் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் குறித்த பிரதேசத்தில் இவர் முகவராக செயற்பட்டுவருவதுடன் தொலைபேசி மூலமாக விற்பனையில் ஈடுபட்டு வருகின்றமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர். (ந)


# களனி பல்கலை மாணவி ஒருவருக்கு கொரோனா

களனி, ஒக்.11

களனி பல்கலைகழக மாணவி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சமூக விஞ்ஞானபீடத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருவரே இவ்வாறு வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார். மினுவங்கொட பகுதியைச் சேர்ந்த குறித்த மாணவியின் தந்தை மினுவங்கொட கைத்தொழிற்சாலையின் ஊழியர் என தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில், மாணவியுடன் தங்கியிருந்த மேலும் இரு மாணவிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என பல்கலைகழகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கொரோனாத் தொற்றாளர் ஒருவர் இனங்காணப்பட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பில் நாளை திங்கட்கிழமை தீர்மானிக்கப்படும். அதுவரை மாணவர்கள் பல்கலைகழக வளாகத்திற்கு வருவதை தவிர்த்துக் கொள்ளவும் என பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்துள்ளார். (ந-இ)



மரணதண்டனை தடை:

# இலங்கைக்கு ஜேர்மன் பாராட்டு



கொழும்பு, ஒக்.11

மரண தண்டனை தொடர்பான தடை குறித்து ஜேர்மனி இலங்கையைப் பாராட்டியுள்ளது.

இது தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ள இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர்ஹோல்கர் சியுபர்ட்,

மரண தண்டனை தொடர்பான தடைக்கு இலங்கையைப் பாராட்ட வேண்டும். இலங்கையில் 1976 ஆம் ஆண்டு முதல் மரண தண்டனை நிறைவேற்றப்படவில்லை. அண்மைய தசாப்தங்களில் உலகெங்கிலும் அதிகமான நாடுகள் மரண தண்டனையை கட்டுப்படுத்தியுள்ளதுடன் இரத்துசெய்தும் உள்ளன. 60க்கும் குறைவான நாடுகளில் மரண தண்டனை அமுலில் உள்ளது. கடந்த ஆண்டு சீனாவில் 650 க்கும் மேற்பட்ட மரண தண்டனைகளும், ஈரானில் 250 க்கும் மேற்பட்ட மரண தண்டனைகளும் நிறைவேற்றப்பட் டுள்ளன.

மரண தண்டனையை ஒழிப்பதற்கான முன் முயற்சிகளை ஆதரிப்பது ஜேர்மனிய மனித உரிமைக் கொள்கையின் முன்னுரிமையாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

# பி.சி.ஆர். சோதனைகளுக்கு அவசரம் தேவையில்லை

கொழும்பு, ஒக்.11

கொவிட்-19 தொற்றுக்கு உள்ளானவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களை பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்த அவசரப்படத் தேவையில்லை என தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

யாரேனும் ஒருவருக்கு தொற்று ஏற்பட்டிருப்பின் 2 10 நாட்களினுள்ளேயே அதனை அறிந்துகொள்ள முடியும் என தொற்று நோயியல் பிரிவின் பிரதானி விஷேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இதுவரையில் இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 4,628 ஆக அதிகரித்துள்ளது. அவர்களுள் 3,306 பேர் பூரண குணமடைந்துள்ளதுடன் 1,309 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)



உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி அஞ்சல் நிலையத்தினர் நேற்று சனிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரி வளாகத்தில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். (ந-9)

## இந்திய – இலங்கை பாதுகாப்பு அதிகாரிகள் சந்திப்பு

கொழும்பு, ஒக்.11

இலங்கைக்கான இந்திய பாதுகாப்பு ஆலோசகர், கெப்டன் விகாஷ் சூட், இலங்கை பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குண ரத்னவை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது, இரு நாடுகளுக் குமிடையில் நீண்டகாலமாக நிலவிவரும் இருதரப்பு உறவுகளைச் சுட்டிக்காட்டிய கெப்டன் விகாஷ், அண்மையில் நியூ டயமன்ட் கப்பலில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்கு "ஒபெரேசன்ஸ் சாகர் ஆரக்ஷா நடவடிக்கையின் மூலம் வெற்றிகரமாக நடவடிக்கை எடுத்தமைக்கு தனது பாராட்டைத் தெரிவித்தார்.

குறித்த பணியினை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் வகையில் ஒத்துழைப்பு வழங்கிய இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர், இரு நாடுகளுக்கிடையேயான துரித செயற்பாடு மற்றும் தீவிர நடவடிக்கை காரணமாக கடல்சார் கூட்டுறவின் முக்கியத்துவம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார். கடல் வளங்கள், கடல்வாழ் இனங்கள், சுற்றுலாத்துறை மற்றும் மீன்பிடி வளங்களை பாதுகாக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட கடற்படை ஒத்துழைப்பு நடவடிக்கைகளை பாதுகாப்புச் செயலாளர் இதன்போது பாராட்டினார்.

இதேவேளை, மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் இந்தியாவின் ஜெய்பூர் செயற்கை கால்கள் தயாரிப்பு தொடர்பாக இலங்கைக்கு அறிமுகம் செய்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. இங்கு இடம்பெற்ற சினேகபூர்வமான கலந்துரையாடலில், இருதரப்பு முக்கியத்துவம் மற்றும் பரஸ்பர செயற்பாடுகள் குறித்து இரு உயர்மட்ட அதிகாரிகளினாலும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# கொரோனாத் தொற்றாளர்களை தேடும் நடவடிக்கை முன்னெடுப்பு

## கம்பஹா மாவட்ட செயலாளர் சுனில் ஜயலத் தெரிவிப்பு

கம்பஹா, ஒக்.11

கம்பஹா மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை ஊடான கொரோனா கொத்தணிப் பரவலில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட 119 பேரைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கம்பஹா மாவட்ட செயலாளர் சுனில் ஜயலத் தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, மாவட்டத்தில் தொற்றுக்குள்ளானவர்களைத் தேடுவதில் பாதுகாப்புத் தரப்புடன் இணைந்து செயற்படுகின்றோம். மேலும், கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் வழங்கிய முகவரிகள் தொடர்பிலும் சந்தேகம் எழுந்துள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் நேற்று வரை 5 ஆயிரத்து 357 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொரோனாத் தொற்றுடன் உறுதி செய்யப்பட்டவர்களின் பரிசோதனை அறிக்கைகள் எம்மிடம் உள்ளன.

இதில் 119 பேரைக் கண்டறிய வேண்டிய நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

### கொரோனா அச்சம்:

## கொழும்பு மருத்துவமனையின் சில பிரிவுகளுக்குப் பூட்டு

கொழும்பு, ஒக்.11

கொழும்பு தேசிய மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைப் பிரிவு மற்றும் இரண்டு சிகிச்சை அறைகள் மூடப்பட்டுள்ளன.

அங்கு பணியாற்றும் சிற்றூழியர்கள் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் காரணமாக பாணந்துறை வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அந்த மருத்துவமனையில் பணிபுரிகின்ற தாதியின் மகளுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## கம்பஹாவில் தொடர் ஊரடங்கு: வர்த்தக நிலையங்கள் திறப்பு

கம்பஹா, ஒக்.11

கம்பஹாவில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம், தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

எனினும், இந்த 18 பொலிஸ் பிரிவுகளுக்கு உட்பட்ட சதோச பல்பொருள் அங்காடிகள் மற்றும் அத்தியாவசிய பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் சுகாதார பரிந்துரைகளுக்கு அமைவாக காலை 8மணி முதல் இரவு 8மணி வரையில் இன்று திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் பெண்ணொருவர் கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து மேலும் பலர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். இந்நிலையிலேயே கடந்த திங்கட்கிழமை முதல் கம்பஹா மாவட்டத்தில் 18 பொலிஸ் பிரிவுகளுக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந,இ)

## '20' திருத்த வரைவு அறிக்கை: சு.கவினால் முன்வைப்பு

கொழும்பு, ஒக்.11

அரசமைப்பின் 20 ஆம் திருத்தச்சட்ட வரைவு தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை இன்னும் சில தினங்களில் முன்வைக்கப்படவுள்ளது.

கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், எதிர்வரும் நாட்களில் 20 ஆவது அரசமைப்பு திருத்தவரைவு தொடர்பான யோசனைகள் பிரதமரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன என பேராசிரியர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே இதுதொடர்பாக பிரதமராலும் குழு ஒன்று நியமிக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டிருந்தது. அத்துடன், 20ஆம் திருத்தத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் அடிப்படையில் நடந்த விசாரணைகளின் பிரகாரம், அதுகுறித்த தமது வியாக்கியானத்தை உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம், கடந்த தினம் சபாநாயகருக்கு அனுப்பிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)




## மாணவனுக்கு தொற்று இல்லை சோதனையில் உறுதி

சிலாபம், ஒக்.11

சிலாபத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார் என குறிப்பிடப்பட்ட 17 வயது மாணவனுக்கு கொரோனாத் தொற்று இல்லையென்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது..

இதையடுத்து அவர் நேற்றிரவு வீடு திரும்பினார். அவருக்கு நடத்தப்பட்ட 2வது, 3வது பி.சி.ஆர். சோதனைகளில் தொற்று இல்லையென உறுதிசெய்யப்பட்டுள்ளது.

17 வயதான மாணவன் சுகவீனமடைந்த நிலையில் தனியார் வைத்தியசாலைக்கு சென்றபோது, வைத்தியரின் ஆலோசனைப்படி, சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட சோதனையில், அவர் தொற்றுக்கு உள்ளாகியிருந்தார் என தெரிவிக்கப்பட்டது. பின்னர், 2ஆம், 3ஆம் சோதனைகளில் கொரோனாத் தொற்று இல்லையென முடிவு வெளியானது.

அத்துடன், மாணவனுடன் தொடர்புபட்ட பங்கதெனிய தனியார் வைத்தியசாலையைச் சேர்ந்தவருக்கு நடத்தப்பட்ட சோதனையில், அவரும் பாதிக்கப்படவில்லையென முடிவு வெளியாகியுள்ளது. இதேவேளை மாணவனுடன் கல்வி வகுப்புக்களில் கலந்துகொண்ட 17 மாணவர்கள் உள்ளிட்ட 33 பேர் தனிமைப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# பொருளாதார நெருக்கடிக்கான தீர்வை அரசு விரைவில் முன்வைக்க வேண்டும்

## சஜித் வலியுறுத்து

கொழும்பு, ஒக்.11



கொரோனாவால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கானத் தீர்வை, அரசாங்கம் விரைவில் முன்வைக்க வேண்டும் என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொரோனா அச்சுறுத்தல் காலத்தினால், இன்று பலருக்கு வேலை வாய்ப்பு இல்லாது போயுள்ளது. ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகமும் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

சிறிய முதல் பெரிய வர்த்தகர்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளனர். மறு புறத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலையும் அதிகரித்துள்ளது. சந்தையில் இன்று அரிசிக்கும் தேங்காய்க்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பொருளாதார ரீதியாக நாட்டின் அனைத்துத் துறைகளும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் தாக்கத்தை நாம் நீண்ட காலத்திற்கு அனுபவிக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வை அரசாங்கம் இன்னும் வழங்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிவாரணங்களையும் வழங்கவில்லை. எனவே, இதற்கான அரசாங்கத்தின் பதில் என்ன என்று நாம் கேட்கவிரும்புகிறோம். இதற்கான திட்டங்கள் ஏதும் இருந்தால், அதனை அரசாங்கம் உடனடியாக நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

# பரீட்சைக்கு முன்னர் மாணவன் உயிர்மாய்ப்பு

திருமலை,ஒக்.11

நாளை இடம்பெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவன் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டார்.

இந்தச் சம்பவம் திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புன்னியடிப் பிரதேசத்தில் நேற்று இரவு நடந்துள்ளது.

19 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரை மாய்த்தார் என்று சேருநுவரப் பொலிஸார் தெரிவித்தனர். கிளிவெட்டி, பாரதிபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவன் சாதாரண தரப் பரீட்சையில் 8ஏ,பி பெறுபேற்றைப் பெற்றுள்ளார்.

சேருநுவர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

# மாரவில மீனவருக்கு கொரோனாத் தொற்று

சிலாபம், ஒக்.11

மாரவில பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் டிகோவிட்ட மீன்வளத் துறைமுகத்தை மூடுவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடந்த 8ஆம் திகதி அந்த மீனவர், தொழிலுக்காக கடலுக்குச் சென்றுள்ளார். இதன்போது, அவருடன் 5 மீனவர்கள் படகில் இருந்துள்ளனர்.

அந்த மீனவருக்கு காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டமையால் ராகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன்போது, அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர் சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (வ-இ)

# 24 மணி நேரத்தில் 263 பேர் கைது

கொழும்பு, ஒக்.11

மேல் மாகாணத்தில் கடந்த 24 மணி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளில் 263 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில், ஹெரோய்ன் மற்றும் ஐஸ் ரக போதைப்பொருள் விற்பனை தொடர்பில் 94 பேரும், கஞ்சா போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட 56 பேரும் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (வ-இ)

# நெக்ஸ்ற் ஆடைத் தொழிற்சாலையில் மேலும் 11 பேருக்கு தொற்று உறுதி

கொழும்பு, ஒக்.11

கட்டுநாயக்கவில் அமைந்துள்ள நெக்ஸ்ற் ஆடைத் தொழிற்சாலையில் மேலும் 11 ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தத் தொழிற்சாலையில் நேற்று முன்தினமும் ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டது.

இந்நிலையில் ஏனைய ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஏனைய தொற்றாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர். (வ-இ)

# நேற்று இராணுவ தினம்

இராணுவ தினம் மற்றும் 71 ஆவது இராணுவ ஆண்டு விழா நேற்று சனிக்கிழமை கொண்டாடப்பட்டது.

இதன்போது மேஜர் ஜெனரல் பதவிக்கு தரம் உயர்த்தப்பட்ட இராணுவத்தின் 12 சிரேஷ்ட பிரிகேடியர்களில் 9 பேருக்கு பாதுகாப்புத் தலைமை பிரதானியும் இராணுவத் தளபதியுமான லெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வா, ஸ்ரீ ஜெயவர்தனபுரவில் உள்ள இராணுவ தலைமையகத்தின் தளபதி அலுவலகத்தில் வைத்து புதிய தரவரிசை சின்னங்கள் அணிவித்தார்.

கடந்த ஆண்டுகளில் இராணுவத்திற்கு மதிப்புமிக்க சேவையை வழங்கிய சிரேஷ்ட அதிகாரிகளுக்கு அவர்களின் பதவி உயர்வு பெற்ற மேஜர் ஜெனரல் தரத்திற்கான, பீக் தொப்பிகள், கேண்கள் மற்றும் வாள்களை வழங்கிய பின்னர், லெப்டினன்ட் ஜெனரல் சில்வா அந்த அதிகாரிகள் அனைவருக்கும் நினைவுச் சின்னங்களை வழங்கினார். அத்துடன் அவர்களின் எதிர்காலத்திற்கு நல்வாழ்த்துக்களையும் தெரிவித்தார். (ந-இ)



# அதிகாரப் பரவலாக்கல் நாட்டை பிளவுபடுத்தும்

## சரத் வீரசேகர எச்சரிக்கை

கொழும்பு,ஒக்.11

அதிகாரங்களைப் பரவலாக்கல் என்பது நாட்டை பிளவுப்படுத்த வழிவகை செய்யும் என்று இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

அதிகாரப்பரவலாக்கல் என்பது மிகவும் ஆபத்தான ஒன்றாகும். அதிகாரம் என்பது மத்திய அரசிடம் மட்டும் தான் இருக்க வேண்டும்.

இது பகிரப்படுவதால், பெரும் பிரச்சினைகளை ஏற்படுத்தும். இதுவே நாட்டைப் பிளவு படுத்துவதற்கும் வழிவகுக்கும். ஆனால், அனைவருக்கும் அதிகாரங்கள் இருக்க வேண்டும். இது தான் அரசின் நோக்கமாகும். தற்போது மாகாணசபை முறைமை தொடர்பாக ஆராய வேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

மாகாண சபை முறைமை இல்லாமல் தற்போது இரண்டு வருடங்களை நாம் கடந்து விட்டோம். இந்த நிலையில், நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள சாதக, பாதக நிலைமைகள் தொடர்பாக ஆராய வேண்டும்.

இதனால், நாடு பின்நோக்கி நகர்ந்துள்ளதா அல்லது நன்மை ஏற்பட்டுள்ளதா என்பதை ஆராய வேண்டும். நிதி விவகாரம் தொடர்பில் பார்க்க வேண்டும். வளர்ந்து வரும் ஒரு நாட்டில் நிதியை அநாவசியமாக பயன்படுத்தக்கூடாது. இதனால் தான் மாகாணசபை முறைமை தொடர்பில் ஆராய வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம். என்றார். (க-இ)

சுடர் ஒளி

மாலைப்பதிப்பு





# விக்ரோறினுக்கு நடந்தது என்ன?

பிரான்ஸின் வீல்பொந்தன் எனும் இடத்தில் நீர் நிலையொன்றிலிருந்து விக்ரோறின் என்ற 18 வயது பல்கலைக்கழக மாணவி சடலமாக மீட்கப்பட்டார். அது தொடர்பான அலசல் இங்கு பிரசுரமாகின்றது. பாரிஸிலிருந்து குமாரதாஸன்

வீல்பொந்தன் (*Villefontaine*) கிராமத்துக்கு அருகே நவீன கடைத் தொகுதிகள் நிறைந்த வணிக வளாகத்தில் சனிக்கிழமை மாலைப் பொழுதை தனது சிநேகிதிகளுடன் கழித்துவிட்டு வீடு திரும்ப ஆயத்தமானாள் விக்ரோறின்.

அப்போது ஏழு மணி ஆகியிருந்தது. மழைநாள் வேறு. சில கிலோமீற்றர்கள் தூரம்தான் என்றாலும் வீடு செல்வதற்கு இரண்டு பஸ்களைப் பிடிக்கவேண்டும். முதல் பஸ்ஸில் ஏறி இரண்டாவது பஸ்ஸைப்பிடிப்பதற்கான தரிப்பிடத்தில் இறங்கிய போது வீடுவரை செல்லும் பஸ் புறப்பட்டுச்சென்றிருந்தது.

அடுத்த பஸ் வர நாற்பத்தைந்து நிமிடங்களுக்கு மேல் எடுக்கும். அதற்குள் இருண்டுவிடும். அதுவரை காத்திருக்காமல் வீட்டுக்கு நடந்து செல்லத் தீர்மானிக்கிறாள். கூட வந்த தோழிகள் சிலர் வீடுவரை வந்து அவளை விட்டுச் செல்வதாகக் கேட்கின்றனர். பழக்கப்பட்ட பாதைதான். தனியே போகிறேன் என்று கூறிவிட்டு புறப்படுகிறாள் விக்ரோறின். அவளோடு வெளியே செல்வதற்காக வீட்டில் அவளது சகோதரி காத்திருக்கிறாள். எனவே அவசரமாக நடக்கிறாள்.

தாயாரை தொலைபேசியில் அழைத்து பஸ்ஸை தவறவிட்டதால் நடந்து வருவதாகக் கூறுகிறாள். தனது நண்பி ஒருத்திக்கும் அழைப்பு எடுக்கிறாள். தனது கைத்தொலைபேசிக்கு சார்ஜ் குறைந்துவிட்டது. இனி அழைக்க முடியாமல் போகலாம் என்ற தகவலைக் கூறுகிறாள்.

பிரதான வீதியைத் தவிர்த்து மரங்கள் அடர்ந்த காட்டுப்பகுதியை குறுக்கே நடந்து கடந்தால் கொஞ்ச நேரத்தில் முப்பது நிமிடங்களில் வீட்டைச் சென்றடைந்து விடலாம்.அதுவே அவளது எண்ணமாக இருந்திருக்க வேண்டும். ஒடுங்கிய புதர்கள் நிறைந்த காட்டுப் பாதையூடாக நடக்கத் தொடங்கினாள்.

இரவு ஒன்பது மணி ஆகிவிட்டிருந்தது.

நடந்துவருகிறேன் எனக் கூறிய விக்ரோறின் வீடுவந்து சேரவில்லை.அழைப்புக்கு பதிலும் இல்லை. பதற்றமடைந்த குடும்பத்தினர் பொலீஸ் அவசர சேவைக்குத் தகவல் சொல்லுகின்றனர்.

கிராமம் முழுவதும் தகவல் பரவுகிறது. இரவு நேரம் என்பதால் அனைவரும் பதற்றமடைகின்றனர். உஷார் அடைந்த பொலிஸார் உடனடியாகவே தேடுதலை தொடங்குகின்றனர்.

கடைசியாக விக்ரோறின் பஸ் தரிப்பிடத்தில் இருந்து காட்டுப் பாதைவழியே நடந்து செல்வதைக் கண்டதாகச் சாட்சி ஒருவர் தகவல் சொல்கிறார்.அதைவிட வேறு எந்தத் தகவலும் இல்லை. உடனடியாகவே மோப்ப நாய்களின் உதவியுடன் அப்பகுதி எங்கும் தேடுகிறது பொலீஸ்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காட்டுப் பகுதியில் ஹெலிகள் மற்றும் ட்ரோன்களின் உதவியுடன் விடாது தேடுதல் தொடர்கிறது. விக்ரோறின் கண்டுபிடிக்கப்படவில்லை.

செப்ரெம்பர் 28 திங்கள் காலை காட்டை அண்டிப் பரந்த நிலப்பரப்பில் அமைந்துள்ள பெரும் நீர் நிலை ஒன்றின் அருகே 'மாஸ்க்', காலணிகள் , கைப்பை போன்ற பொருள்களை பொலீஸ் மோப்ப நாய்கள் முகர்ந்து பிடிக்கின்றன.

சற்று நேரத்தில் மரக்கிளைகள், புதர்கள் மண்டிய அந்த இருண்ட நீர்நிலையில், இலகுவில் எட்ட முடியாத ஒரு பகுதியில் இருந்து, விக்ரோறினின் உடல் சுழியோடிகளால் மீட்கப்படுகிறது.

காணாமற் போன யுவதி உயிரிழந்த செய்தி வேகமாகப் பரவுகிறது. வீல்பொந்தன் வாசிகள் மட்டுமன்றி நாட்டு மக்கள் அனைவருமே பெரும் அதிர்ச்சி அடைகின்றனர்.

நீருக்குள் சடலம் கிடந்த கோணமும் அருகே தரையில் அவளது உடைமைகள் சிதறிக்கிடந்த விதமும் அது ஒரு விபத்து அல்ல என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி உணர்த்துகின்றன. தடயவியல் நிபுணர்களும் புலனாய்வாளர்களும் அவ்விடத்தில் குவிகின்றனர்.

முதலாவது பிரேத பரிசோதனை நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணம் என்பதை தெளிவாகக் காட்டுகிறது. ஆனால் "மூன்றாவது தரப்பு" ஒன்றினால் அவள் பலவந்தமாக மூழ்கடிக்கப்பட்டிருப்பதை உடலின் உட்பகுதிக் காயங்கள் வெளிப்படுத்துகின்றன என்று அரச சட்டவாளர் அறிவிக்கிறார்.

நீரில் கிடந்த சடலத்தில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதற்கான தடயங்கள் எதுவும் உடனடியாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும் உடற்கூற்றுப் பரிசோதனைகள் தொடர்ந்து நடக்கின்றன. நீண்ட நேரம் தண்ணீரில் கிடந்ததால் சடலத்தில் கைரேகைகள், டிஎன்ஏ தடங்களைக் கண்டுபிடிப்பது நிபுணர்களுக்குப் பெரும் சவாலாகிறது. தடயவியலாளர்கள் காடு முழுவதையும் சல்லடை போடுகின்றனர். எந்தத் தடயமும் சிக்கவில்லை. ஊர் முழுவதும் துப்புத் தேடி நூற்றுக்கணக்கானவர்களிடம் விசாரணை நடத்தப்படுகிறது.

வீடுகளோ, மின் ஒளி வசதியோ கண்காணிப்புக் கமராக்களோ எதுவும் இல்லாத அந்தக் காட்டுப் பாதையை ஊரவர்கள் பயன்படுத்துவது மிகஅரிது. அவசரத்துக்கு எப்போதாவது சிலர் அதனை தாண்டிச் செல்வர்.அவ்வளவுதான். ஆள்நடமாட்டம் அற்ற அந்தப்பகுதி குறித்து ஒருவித அச்ச உணர்வு அங்கு உள்ளது.

குறிப்பிடும் படியான குற்றச் செயல்கள் எதுவும் இடம்பெற்றிராதபோதிலும் அந்தக் காட்டுப் பகுதியை உள்ளூர் வாசிகள் "*le coupegorge*" என்றே அழைக்கின்றனர்."*le coupegorge*" என்பது பிரெஞ்சு மொழியில் "கழுத்தறுப்பு" என்ற அர்த்தத்தைத் தருவது. அந்தப்பகுதியை "கழுத்தறுப்புக் காடு" என்றே பலரும் அழைத்துவந்திருக்கின்றனர் என்பது இப்போது தெரியவருகிறது. ஆளரவம் இல்லாத அந்தக் காட்டுக்குள் வைத்து படுகொலையைப் புரிந்தவர்கள் யார்?

முழுநேர விசாரணையாளர்கள் பத்துப் பேர், மூன்று விசேட வழக்கறிஞர்களின் கீழ் 24 மணிநேரமும் துருவிக்கொண்டிருக்கின்றனர்.

லியோன் நகரில் இருந்து சுமார் 30 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள *Isère* மாவட்டத்தின் நுழைவாயிலிலேயே விக்ரோறினியின் சொந்தக் கிராமமான வீல்பொந்தன் (*Villefontaine*) அமைந்துள்ளது. அமைதியான அந்தக் கிராமத்தில் திரும்பிய திசை எங்கும் பெரும் சோகம் கவிந்திருக்கிறது. ஒருவித அச்ச உணர்வும் பரவியுள்ளது.

18 வயதான இளம் பல்கலைக்கழக மாணவி விக்ரோறின் (*Victorine Dartois*) சுமார் 19 ஆயிரம் குடும்பங்கள் வசிக்கும் அந்தக் கிராமத்தில் பலரினதும் கவனத்துக்கும் பிரியத்துக்கும் உரிய பெண்.

"அழகும் அனைவரையும் கவரும் தன்மையும் கொண்டவள் விக்ரோறின். பயந்த சுபாவமுடையவள். ஆனால் எல்லோருக்கும் உதவிக்கு முன்நிற்பாள்.இலகுவில் எவரையும் அணுகமாட்டாள். சண்டை சச்சரவுகளில் சிக்காதவள். அறிமுகமற்ற எவருடனும் எங்காவது செல்லக் கூடிய துணிச்சல் கொண்டவளும் அல்ல "

இவ்வாறு விக்ரோறினின் குடும்பத்தினரும் நண்பிகளும் விம்மி வெடித்து வரும் அழுகையை அடக்கியவாறு கூறிக்கொள்கின்றனர்.

" யாரோ தெரிந்தவர்கள்தான் அவளை அணுகி இதனைப் புரிந்திருக்க முடியும்" என்றும் சிலர் ஐயம் எழுப்புகின்றனர். அவளது தொலைபேசியின் கடைசி அழைப்புகள், அதன் நகர்வுகள், 'சற்றிங்' போன்ற அவளது டிஜிட்டல் தொடர்பாடல்களை அறிவியல் பொலிஸ் நிபுணர்கள் ஆழமாக ஆராய்கின்றனர். இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டவர் அல்லது சம்பந்தப்பட்டவர்கள் யார்?எதற்காக விக்ரோறின் கொல்லப்பட்டாள்?

இரண்டு வாரங்களுக்கு மேலாகியும் முக்கிய தடயங்களோ தகவல்களோ இன்னும் கிடைக்கவில்லை. இப்போதைக்கு கொலையில் சம்பந்தப்பட்ட நபரை "எக்ஸ்" (X) எனக் வைத்துக் கொண்டு அவரைத் தேடிப்பிடிக்கும் நோக்குடனான நீதி விசாரணைகள் முழு விச்சில் நடந்துவருகின்றன.

ஆய்வுக்கு வேண்டிய உடற்கூறுகள் எடுக்கப்பட்ட பின்பு விக்ரோறினின் உடல் அவளது குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டு கடந்த புதன்கிழமை(ஒக்ரோபர் 7)நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. கிராமத்தின் தேவாலயம் ஒன்றில் நடந்த இறுதி ஆராதனையில் வீல்பொந்தன் கிராமமே திரண்டு வந்து அவளுக்கு கண்ணீரஞ்சலி செலுத்தியிருக்கிறது. அதற்கு முன்பாக நடைபெற்ற அனுதாபப் பேரணி ஒன்றில் சுமார் ஆறாயிரம் பேர் வெண்ணிற ஆடை அணிந்து வந்து துயர் ததும்பப் பங்குகொண்ட காட்சி நாடு முழுவதும் பெரும் உணர்ச்சிப் பெருக்கை ஏற்படுத்தியது.

நாடெங்கும் வைரஸின் வேகத்திற்குச் சமமாக வன்முறைச் சம்பவங்களும் பெருகிவருகின்றன. குற்றச் செயல்கள் நகரங்களில் மட்டுமன்றி கிராமங்களிலும் அதிகரிக்கின்றன. இளம் பெண்கள், சிறுவர்கள், சிறுமிகள் கடத்தப்படுவது, வல்லுறவுக்குள்ளாக்கப்படுவது, கொலை செய்யப்படுவது போன்ற சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன. எங்கும் எவருக்கும் பாதுகாப்பற்ற நிலைமை.

இவ்வாறான ஒரு பின்னணியில் நிகழ்ந்திருக்கும் மற்றொரு சம்பவமே இது.

குற்றச் செயல்களால் உருவாகியிருக்கும் "பாதுகாப்பற்ற உணர்வு" (*insecurity*) என்னும் விடயம் பிரான்ஸ் அரசியலில் ஒரு முக்கிய விவாதப் பொருளாக மாறியிருக்கின்ற இந்த சமயத்தில், விக்ரோறினின் படுகொலை நாடளாவிய கவனத்தை ஈர்த்திருக்கிறது.

உலகம் முழுவதும்

# 15 கோடி மக்கள் வறுமையின் பிடியில்

வொஷிங்டன், ஒக்.11

கொரோனாத் தொற்று காரண மாக அடுத்த ஆண்டில் உலகம் முழுவதும் 15 கோடி பேர் வறு மைக்குத் தள்ளப்படும் அபாயம் உள்ளது என உலக வங்கி எச்சரித் துள்ளது.

இது தொடர்பாக உலக வங்கி கடந்த புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில், கொரோனா இவ் வாண்டு கூடுதலாக 8.8 கோடி முதல் 11.5 கோடிக்கும் அதிகமான மக்களை வறுமை நிலைக்குத் தள்ளும் என தெரிவிக்கப்பட்டுள் ளது. அடுத்த ஆண்டில் இந்த எண்ணிக்கை 15 கோடியாக உயரும் அபாயம் உள்ளது எனவும் உலகம் முழுவதும் 1.4 சதவீதத்துக் கும் அதிகமான மக்கள் கடுமை யான வறுமை நிலைக்குத் தள்ளப் படக்கூடும் எனவும் உலக வங்கி யின் குழுமத் தலைவர் டேவிட் மால்பாஸ் கூறியுள்ளார். ஏற்க னவே அதிக வறுமை விகிதங்களைக் கொண்ட நாடுக ளில் மேலும் பல இலட்சம் பேர் வறுமை நிலைக்குத் தள்ளப் படுவார்கள் எனவும் நடுத்தர வருவாய் கொண்ட பல நாடுகளில் கணிசமான மக்கள் அதிக வறு மைக் கோட்டுக்கு கீழே செல்லும் அபாயம் உள்ளது எனவும் அறிக் கையில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

கொரோனாவுக்குப் பின்னரான வேறுபட்ட பொருளாதாரத் துக்கு உலக நாடுகள் தயாராக வேண்டும் என உலக வங்கியின் குழுமத் தலைவர் வலியுறுத்தி யுள்ளார். (வ-இ)

# ரயில் – பஸ் மோதல்; 17 பேர் உயிரிழப்பு

பாங்கொக், ஒக்.11

தாய்லாந்தில் பஸ்ஸுடன் ரயில் மோதி விபத்துக்குள்ளான தில் 17 பேர் உயிரிழந்துள்ளனர் என அந் நாட்டு அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

தாய்லாந்தின் தலைநகர் பாங் கொக்கின் ச்சேவ்ங்ஸோ பகுதி யில் இன்று அதிகாலை இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. 65 பயணிகளுடன் பயணித்த சுற்றுலா பஸ் ரயில் பாதையை கடக்கும்போது துரதிர்ஷ்டவசமாக ரயிலுடன் மோதியுள்ளது.

இதன்போது 17 பேர் உயிரிழந்த துடன், 30 பேர் காயமடைந்துள் ளனர் என மாவட்ட தலைமை அதிகாரியான பிரதுயெங் யூகாசெம் உறுதிப்படுத்தி யுள்ளார்.

மழைபெய்து கொண்டிருந்தமை யினால் பஸ் சாரதி ரயில் வரு வதை அவதானிக்கவில்லை என்றும் ஆரம்ப கட்டத் தகவல் களில் தெரியவந்துள்ளன.



# ஆர்மேனியா – அசர்பைஜான் போர் நிறுத்தத்துக்கு இணக்கம்



ஆர்மேனியா மற்றும் அசர்பை ஜான் ஆகிய நாடுகள் தற்காலிக போர் நிறுத்தத்துக்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

நாகோர்னோ கராபாக் பிராந்தியம் தொடர்பில் இரு நாடுகளுக்குமிடையில் அண் மையில் மோதல் ஆரம்பித்தது. இந்த நிலையில், ரஷ்ய தலைந கர் மொஸ்கோவில் இடம் பெற்ற சுமார் 10 மணித்தியால பேச்சுவார்த்தையின் பின்னர் இரு நாடுகளும் தற்காலிக போர் நிறுத்தத்துக்கு இணக்கம் தெரிவித்துள் ளன. இதற்கான உத்தியோகபூர்வ அறி விப்பை ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்கெய் லாவ்ரொவ் வெளியிட்டார். மேலும், இரு நாடுகளுக்குமிடையில் கைதி கள் பரிமாற்றம் இடம்பெறவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். நாகோர்னோ கராபாக் பிராந்திய உரிமம் தொடர்பில் அசர்பைஜா னுக்கும் ஆர்மேனியாவுக்கும் இடையே ஏற்பட்ட போரில் இதுவரை 300 பேர் உயிரி ழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)



## பெய்ரூட்டில் டீசல் தாங்கி வெடிப்பு 4பேர் சாவு; பலர் காயம்

பெய்ரூட், ஒக்.11

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் நேற்று முன்தினம் இரவு கட்டடம் ஒன்றுக்குள் டீசல் தாங்கி வெடித்ததில் நான்கு பேர் உயிரிழந்தது டன் 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள் ளனர் என லெபனான் செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள்ளது. பெய்ரூட்டின் மேற்கு சுற்றுப் புற நகரமான தாரிக் ஜாதிதாவில் ஏற்பட்ட இந்த வெடிப்புக்கான காரணம் உறுதிப்படுத் தப்படாத நிலையில், கட்டடத்தின் அடித்தளத் தில் அமைந்துள்ள பேக்கரியில் ஏற்பட்ட தீப் பரவல் இதற்கு காரணமாக இருக்கலாம் என்றும் அரசின் தேசிய செய்தி நிறுவனம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது. (வ-இ)

## உலகின் மிகப்பெரிய ஏவுகணை வடகொரியாவில்!

பியோங்கியங், ஒக்.11

தொழிலாளர் கட்சியின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி உலகின் மிகப் பெரிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை வட கொரியா காட்சிப்படுத்தியுள்ளது.

வடகொரியத் தலைநகர் பியோங்கி யங்கில் சனிக்கிழமையன்று நடை பெற்ற இரண்டு மணிநேர

நிகழ்வின்போது இரு பக்கமும் தலா 11 டயர்கள் பொருத்தப்பட்ட கனரக வாகனமொன்றில் இந்த ஏவுகணை இராணுவத்தினரால் கொண்டுவரப்பட்டது. (வ-இ)



## கொரோனாப் பாதிப்பால் தற்கொலைகள் அதிகரிப்பு

கொரோனா வைரஸ் பரவல் காரண மாக ஏற்பட்டுள்ள மன உளைச்சல் காரணமாக ஜப்பானில் தற்கொலை கள் அதிகரித்துள்ளன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ் வருடத்தில் ஜப்பானில் ஆயிரத்து 854 தற்கொலைகள் பதிவாகியுள்ளன என ஆய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 15.4 வீத அதிகரிப்பு என புள்ளிவிபர தரவு கள் குறிப்பிடப்படுகின்றன. கொவிட் 19 வைரஸ் பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்க டிகள், தொழில் வாய்ப்பின்மை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தற்கொலையைத் தூண்டும் காரணி கள் என ஆய்வு முடிவுகளில் குறிப்பி டப்பட்டுள்ளன. (வ-இ)